1982 பிப்ரவரி 17]

மாண்புமிகு திரு எம். விஜயசாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் தெரிவித்திருக்கக் கூடிய கருத்தின் அடிப்படையில்தான் பதில் அளித்திருக்கிறேன். வருகின்ற நடப்பு ஆண்டில் இதை அரசு பரிசீலனை செய்யும்.

வேலை நேரத்தில் விபத்துக்குள்ளாகி இறக்கும் கட்டிடத் தொழிலாளர் குடும்பத்திற்கு இழப்பீடு வழங்கும் திட்டம்.

குறுகிய கால வினா எண் 1. *திரு. இரா. தாமரைக்கனி: திரு. எம். சின்னசாமி: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கட்டிடம் கட்டும் தொழிலாளி வேலை நேரத்தில் விபத்துக்குள்ளாகி மாண்டால் அவருடைய குடும்பத்திற்கு ரூபாய் 10,000 வழங்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) இத்திட்டத்திற்கு மத்திய அரசு சட்டம் இயற்ற காலதாமதம் ஆவதால் தமிழக அரசின் நிலை என்ன?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: (அ) மற்றும் (ஆ): மத்திய அரசு கொண்டுவர உத்தேசித்திருக்கும் 'கட்டிடம் மற்றும் கட்டுமானத் தொழிலாளர்கள் சட்டம்' இயற்றுவதில் காலதாமதம் ஏற்படக் கூடுமாதலால், மாநில அளவில் இவர்களுக்கென ஒரு சட்டத்தினை மேற்கொள்ள இவ்வரசு தீர்மானித்துள்ளது. சட்டம் விரைவில் கொண்டு வரப்படும். கட்டிடம் கட்டும் தொழிலாளி வேலை நேரத்தில் விபத்துக்குள்ளாகி மாண்டால் அவர் குடும்பத்திற்குத் தகுந்த இழப்பீடு வழங்க இச்சட்டத்தில் வழிவகை செய்ய உத்தேசிக்கப் பட்டிருக்கிறது.

திரு. இரா. தாமரைக்கனி: தலைவர் அவர்களே, தமிழக அரசு இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்ததற்கு மிக்க நன்றி. அந்தச் சட்டம் வருவதில் காலதாமதம் ஆவதைத் தடுக்க இந்தத் திட்டத்தை விரைவில் செயல்படுத்த மத்திய அரசு மாநில அரசுக்கு ஏதாவது ஆலோசனை கூறியுள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசின் சட்டம் டிராப்ட் பில்—மாநில அரசுக்கு அனுப்பப்பட்டது. அதற்கு வேண்டிய ஆலோசனையை இந்த அரசு அனுப்பியிருக்கிறது. நாம் உடனே கொண்டு வருவோம் என்று சொல்லவில்லை. மத்திய அரசு கொண்டுவருவதில் தாமதம் ஏற்படுமானால், மாநில அரசு

[1982 பிப்ரவரி 17

ஒரு சட்டத்தைத் தயாரித்து, சட்ட இலாகாவுக்கு அனுப்பியுள்ளதை, சட்ட இலாகாவிலிருந்து வந்த பிறகு, அதுவரையில் மத்திய அரசு அந்தச் சட்டத்தைக் கொண்டு வராமல் இருந்தால் மாநில அரசு அந்தச் சட்டத்தை கொண்டு வந்து, இந்தச் சட்டமன்றத்தில் நிறைவேற்ற எல்லா முயற்சிகளையும் எடுத்துச் கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். நம்முடைய பரிந்துரைகள் கிட்டதட்ட 5 பரிந்துரைகள் இருக்கின்றன. அதைப் படிப்பதற்கு அனுமதி கொடுத்தால், படித்துக் காண்பிக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவைகள் நீளமான பரிந்துரைகளாக இருந்தால், அவையின் முன் அறிக்கையாக வைத்து விடவேண்டும்.

திரு. எம். சின்னசாமி: தலைவர் அவர்களே, கட்டிடத் தொழிலாளர்கள் வேலை செய்யும்போது திடீரென்று இறந்து விடுகிறார்கள். ஆகவே, அவர்கள் கட்டாயமாக இன்ஷுரன்ஸ் செய்யவேண்டும் என்ற சட்டத்தை அரசு கொண்டு வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டத்தைப்பற்றி இப்போதே விவாதம் செய்வதற்கு இறங்கிவிடக்கூடாது என்று சொல்லிக்கொள்கிறேன். அவர்களுக்கு இழப்பீடு கொடுப்பதற்கும்—மத்திய சட்டத்திலே வழிவகை செய்யப்பட்டுள்ளது.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி: மாண்புமிகு பேரவை தலைவர் அவர்களே, இந்தக் கட்டிடத் தொழிலாளர்களுக்கு பத்தாயிரம் ரூபாய் விபத்தில் இறந்தால் கொடுக்கவேண்டும் என்று கேட்கிறார்கள். பனையேறும் தொழிலாளர்களுக்குச் சட்டம் கொண்டு வராமலேயே கொடுக்கிறபோது.....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கட்டிடத் தொழிலாளர்களைப் பற்றி மட்டும் கேட்கவேண்டும். பனைமரம் ஏறும் தொழிலாளர்களைப் பற்றிக் கேட்க ஆரம்பித்தால், நேரம் அதிகமாகும். ஆகவே, மூலக் கேள்வியை ஒட்டிக் கேட்க வேண்டும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி: தலைவர் அவர்களே, கட்டிடத் தொழிலாளர்கள் விபத்தில் இறந்தால் 10,000 ரூபாய் கொடுக்கும் முறை சட்டத்தால் அல்ல, சட்டம் இல்லாமலேயே தருவதற்கு அரசு முன்வருமா? ஏனென்றால் பனையேறும் தொழிலாளர்கள் இறந்துவிட்டால் உடனடியாக 10,000 ரூபாய் தருகின்றபோது இந்தக் கட்டிடத் தொழிலாளர்களுக்கும்—அவர்கள் திடீரென்று இறந்துவிட்டால்-ரூ. 10,000 கொடுப்பதற்குச் சட்டம் கொண்டு வந்துதான் செய்யவேண்டும் என்று சொல்வதற்கு என்ன காரணம் என்று அறிய விரும்புகிறேன்.

1982 பிப்ரவரி 17]

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : *தலைவர் அவர்களே, அதுதான் எனக்கும் தெரியவில்லை. 30-32 ஆண்டு காலமாக இதைப்பற்றி யாருமே சிந்திக்காமல் ஏன் விட்டு விட்டார்கள் என்று தெரியவில்லை. இந்த அரசு வந்ததற்குப் பிறகுதான் இதற்குச் சட்டத்திலே ப்ரொவிஷன் செய்யலாம் என்று உத்தேசித்துக் கொண்டு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.*

திரு. இ. சட்டநாத கரையாளர்: அவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டம் பட்ஜெட் கூட்டத் தொடரில் வருமா? அந்தச் சட்டத்திலே நஷ்டஈடு கொடுப்பதற்கு இன்ஷூரன்ஸ் மூலமோ அல்லது அரசு நேரடியாகக் கொடுப்பதன் மூலமோ அல்லது முதலாளிகளிடமிருந்து வரைபடம் தாக்கல் செய்கிற போது ஒரு தொகையை வசூலிப்பதன் மூலமோ-அல்லது தொழிலாளர்களிடமிருந்து பங்குத் தொகை வசூலிப்பதன் மூலமோ என்று எந்த அடிப்படையில் அந்த நஷ்டஈடு கொடுப்பதற்கு வழிவகை செய்யப்பட்டிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சட்டத்தைப் பற்றியே விரிவான விளக்கம் கேட்டு இருக்கிறார். எல்லா விவரங்களையும் சொல்வதற்கு ஆரம்பித்தால் நேரம் போதாது. ஆகவே, சட்டத்தைப்பற்றி விரிவாகப் பின்னர் பேசலாம்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: பேரவைத் தலைவர் அவர்களே, வருகின்ற பட்ஜெட் கூட்டத் தொடரில் வருமா என்று கேட்டார்கள். இப்போதே உடனடியாகக் கொண்டு வந்து விட முடியாது. மத்திய அரசு கொண்டு வரவில்லையென்றால், மத்திய அரசு அந்தச் சட்டத்தைக் கொண்டு வருவதைத் தாமதப்படுத்தினால், மாநில அரசு கொண்டு வரும். இதுதான் இன்றுள்ள நிலைமை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு:—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. தகவல் கோரல்.

(அ) 'பால்கமிஷன்' அறிக்கைமீது நடைபெற்ற விவாதம்-தொடர்பாக.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மன்றத்தில் சற்றேறக்குறைய 3 தினங்களுக்கு பால் கமிஷன் அறிக்கைமீது விவாதம் நடைபெற்று அதிலே நாங்கள் எல்லாம் பங்கெடுத்துக் கொண்டோம். அதில்